RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21435

# சங்க இலக்கியத்தில் அறச்சிந்தனைகள்

சி. அமுதா [அ]

[அ] தமிழ்த்துறை, மன்னர் சரபோஜி அரசு கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர்-613005, இந்தியா

# Ethical thoughts in Sangam literature

S. Amutha [a, *]

[a] Department of Tamil, Rajah Serfoji Government College, Thanjavur-613005, India.

* Corresponding Author: drsatamil@gmail.com

Received: 26-07-2021
Revised: 09-10-2021
Accepted: 16-10-2021
Published: 30-10-2021

Check for updates

**ABSTRACT**

In Sangam literature, the great times and minor periods in the Agam songs reveal the mental thoughts of the Hero and heroine on the daily life of the ancient people. In that sense, both the great and the small periods are inherently contained in them a lot of ethical thoughts. By examining them, it is possible to know that the thoughts of morality are being studied in the Aga songs as well. This article is intended to highlight the good ideas that ancient literature requires for the life of life.

**Keywords:** Sangam literature, Agam Songs, Thoughts, People

## முன்னுரை

சங்க இலக்கியத்தில் அகப்பாடல்களில் இடம்பெறும் பெரும்பொழுதுகள் சிறுபொழுதுகள் பண்டைய மக்களின் அன்றாட வாழ்வியல் குறித்த, தலைவன் தலைவியின் மனநிலை சார்ந்த சிந்தனைகளை வெளிக்காட்டுவனவாக அமைகின்றன. அவ்வகையில் பெரும்பொழுதுகள், சிறுபொழுதுகள் இரண்டும் உள்ளார்ந்த நிலையில் அறச்சிந்தனைகள் பலவற்றையும் தன்னுள் கொண்டு விளங்குகின்றன. அவற்றை ஆராய்வதன் மூலமாக அகப்பாடல்களிலும் அறச்சிந்தனைகள் பயின்று வருவதை அறிய இயலும். பழங்கால இலக்கியங்கள் வாழ்வியலுக்குத் தேவையான நற்கருத்துக்களை எடுத்துயியம்பும் விதமாக இக்கட்டுரை அமையயுள்ளது.

## அறம் - விளக்கம்

பண்டைத் தமிழர்கள் உறுதிப் பொருள்களை அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்காகக் கொண்டனர். அறம் என்றால் நல்வழி, நடக்கை, நற்செயல்களைப் பின்பற்றுகை என்னும் நிலையில் பொருள்படும். பொருள் என்பது நல்வழியில் நின்று ஈட்டப்படும் பொருளைக் குறிக்கும். இன்பம் நல்வழியில் ஈட்டப்பட்ட பொருளால் வரும் இன்பத்தைக் குறிக்கும். நல்வழியில் நடத்தல், நல்ல வழியில் ஈட்டப்படும் பொருள், அதனால் பெறும் இன்பம் ஆகிய மூன்றும் வீடுபேற்றைத் தரும். அறம் குறித்துக் காலந்தோறும் பல்வேறு விளக்கங்கள் கூறப்பட்டு வந்திருக்கின்றன. 'அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாகும். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டமென மூவகைப்படும்' என்பர் பரிமேலழகர். 'இவற்றுள் (மேற்குறிப்பிட்டவற்றுள்) வழக்குந் தண்டமும் உலகநெறி நிறுத்துதற் பயத்தவாவதல்லது ஒழுக்கம் போல மக்களுயிர்க்கு உறுதி பயத்தற் சிறப்பிலவாகலானும், அவை தாம் நூலானேயன்றி உணர்வு மிகுதியானுந் தேய வியற்கை யானும்

அறியப்படுதலானும், அவற்றையொழித்து, ஈண்டுத் தெய்வப் புலமைத் திருவள்ளுவராற் சிறப்புடைய ஒழுக்கமே அறமென எடுத்துக்கொள்ளப்பட்டது' என்று பரிமேலழகர் அறத்திற்கு விளக்கம் தருகிறார்.

நாலடியார் 'அறம் எனப்படுவது உலக உயிர்களுக்கு நற்செயல்களைச் செய்வதும், உறுதிச் சொல் கூறுவதும், ஈகை முதலான செயல்களைச் செய்வதும்' என்று குறிப்பிடுகிறது. நாகை, பொ. தண்டபாணியார், 'அறம் என்னும் சொல் அறு என்னும் முதனிலை அடியாகப் பிறந்து தீவினையை அறுப்பதெனப் பொருள்படும். அம்மூலப் பொருளை உட்கொண்டே ஆசிரியர் ஈண்டு மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன் என்றார். அறியாமையால் விளைவது தீவினை அறியாமையாவது இருள். அவ்விருளை அகற்றுவதே அறத்தின் பயன்' என்று குறிப்பிடுகிறார்.

அறம் என்னும் சொல்லுக்குப் பலபொருள்கள் இருக்கின்றன. பேரகரமுதலி 'நல்வினை, ஐயம் (பிச்சை) ஏழைகட்கு இலவசமாகக் கொடுப்பது, நோயாளிகளுக்கு இலவசமாக மருந்து கொடுப்பது, நன்மையானது, இன்பம், கற்பு, தகுதியானது, நோன்பு, அறப்பயன், சமயம், ஓதி, அறச்சாலை, அறத்தெய்வம், நடுநிலை, அறம்பேனும் கூற்றுவன்' எனப் பதினைந்து பொருள்களைக் குறிப்பிடுகின்றது. க.த. திருநாவுக்கரசு, 'அறு என்னும் அடிச் சொல்லிற்கு அறுத்துச் செல், வழியை உண்டாக்கு, உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து என்ற பல்வகைப் பொருள்கள் வழங்கி வருகின்றன. அம் என்னும் தொழிற்பெயர் விகுதி அறுத்தலாகிய தொழிலை உணர்த்துகின்றது. இத்தகைய சொல்லமைப்பியல் ஆராய்ச்சியின் அடிப்படையில் அறம் என்னும் சொல்லிற்குப் பின்வரும் விளக்கம் தரப்படுகின்றது. மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க நெறிமுறைகளின் தொகுதியே முழுநிறை வடிவமே அறம் என்று கூறுவர்' என்று குறிப்பிடுகிறார். சங்க இலக்கியங்களிலும் அறநூல்களிலும் அறம் என்னும் கருத்தமைவில் பல பாக்கள் இடம் பெற்றிருக்கின்றன. அவை அறம் என்னும் சொல்லை நேரடியாக எடுத்தாள்கின்றன. இதனை,

'அறஞ்சாரான் மூப்பேபோல்'

'அறனி லாளன்'

'அறநெறி யிதுவெனத் தெளிந்த'

'அறத்தா

றற்றென மொழிந்த தொன்றுபடு கிளவி'

'அறக்கழி வுடையன பொருட்பயன் வரினே'

'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்'

'அற நனி சிறக்க'

என்னும் சில பாடலடிகளால் அறியலாம். மணிமேகலை,

'அறமெனப் படுவதியா தெனக் கேட்பின்

மறவா திதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்

உண்டியு முடையு முறையுளு மல்லது

கண்ட தில்'

என்று அறத்தின் தன்மையைக் குறிப்பிடுகிறது. ஔவையார் 'ஈதல் அறம்'15 என்று ஈதலை அறமாகக் குறிப்பிடுகின்றார்.

## அறத்தின் தோற்றம்

உலக வரலாற்றில் ஒருவன் மற்றொருவனுக்காக உதவி செய்யத் தலைப்பட்ட நிலையில் அறம் தோன்றியது எனலாம். கலைக் களஞ்சியம், 'ஆதி மக்களுடைய வாழ்க்கையில் துல்லியமான அறப்பண்பைக் காணுதல் இயலாது. ஆயினும் அறத்தின் கூறுகள் சில காணப்படுகின்றன. அவை

இயற்கை விருப்பத்தின் தூண்டல்களாகவும் சமுதாயக் கட்டுப்பாட்டின் விளைவுகளாகவும் அமைந்தவை. நல்லது, கெட்டது ஆராய்ந்து பார்க்கும் பகுத்தறிவினால் ஏற்பட்ட பண்புகளல்ல அவை. ஆயினும், அவை மனிதனிடத்தில் தோன்றியிராவிடில் அவன் விலங்கு நிலையிலேயே இருந்திருப்பான். எனவே மனித குலத்திற்குச் சிறப்புக் குணமாக விளங்குவது அறம் என்பதும், அதன் மூலத் தத்துவங்கள் மனித வரலாற்றின் முதல் நிலையிலேயே தோன்றின என்பதும் கருத்தில் கொள்ளத்தக்கன' என்று குறிப்பிடுகிறது.

ஒருவருக்கொருவர் உதவும் பண்பும், இரக்கம் கொள்ளும் பண்பும் தோற்றம் பெற்ற நிலையிலேயே அறம் தோற்றம் பெற்றுவிட்டது எனலாம். நல்ல செயல்களின் தொகுப்பாக விளங்கும் அறம் பண்டைக்காலம் முதலே கடைப்பிடிக்கப்பட்டு வந்த ஒன்றாகும். 'பழங்கால மக்கள் பசி, பிணி, பகை, வறுமை ஆகிய வாழ்க்கைப் போராட்டங்களிடையே இன்பமும் பொருளும் பெறப் பல்வேறு நெறிகளையும் பின்பற்றியிருப்பர். இந்நெறிகளில் பிறருக்குத் தீங்கு பயவாத நல்ல நெறியிலேயே பெறவேண்டும் என்ற ஒழுகலாறு கட்டுப்பாடாக, கடமையுணர்வாக மக்களிடையே வளர்ந்து ஏற்றுக் கொள்ளப் பெற்றிருத்தல் வேண்டும். மரபொழுக்க நிலையில் இவ்வாறு ஏற்றுப் கொள்ளப்பெற்ற நெறிகளையே அறங்கள் என இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன' என்று முத்துலக்குமி குறிப்பிடுகிறார். எனவே அறம் என்றால் நல்ல செயல்களின் தொகுதி என்று பொருளாகிறது.

## பொழுதுகளில் அறம்

சங்க இலக்கியங்களில் பெரும்பொழுதுகள் ஆறும், சிறுபொழுதுகள் ஆறும் நிகழ்ச்சிக்கான முக்கியக் களங்களாக அமைந்திருக்கின்றன. பொழுதைக் களமாகக் கொண்டு அமையும் பாடல்கள் மிகச் சிறந்த அறக்கருத்துகளைக் கொண்டிருக்கின்றன. சங்க அக இலக்கியங்களில் சிறப்புற்று விளங்கும் அறக்கருத்துகள் களவு, கற்பு என்னும் நிலைகளிலும் வாழ்வியல் நோக்கிலும் அமைந்து சிறக்கின்றன. தனிநாயகம் அடிகள், 'அகத்துறை இலக்கியங்களில் எல்லாம் உலகிலேயே ஒப்பற்று விளங்குவது தமிழில் உள்ள அகத்துறை இலக்கியங்களே' என்று குறிப்பிடுகிறார்.

சங்க அகப்பாக்களில் பொழுதின் அடிப்படையில் அமைந்த பாடல்களில் இடம்பெறும் அறச்சிந்தனைகள் தலைவன் தலைவியின் மனநிலையினையும், காலப்பின்னணியினையும் களமாகக் கொண்டு அமைகின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைகளில் இடம்பெறும் கார்காலம், குளிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனிற்காலம், முதுவேனிற்காலம் ஆகிய ஆறு பெருமபொழுதுகளும் வைகறை, காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம் ஆகிய சிறுபொழுதுகளும் தலைவன் தலைவியின் அக வாழ்வியல் சார்ந்த அறங்களைத் தெளிவுபடுத்துவனவாக அமைகின்றன. யாமம், மாலை, எற்பாடு, வைகறை, நண்பகல் என்னும் ஐந்து சிறுபொழுதுகளும் ஒவ்வொரு திணையிலும் அதனதன் நிலையில் செயல்படும்போது பொழுது சார்ந்த உளவியல் நிகழ்கிறது.

குறிஞ்சித் திணையில் யாமப்பொழுதில் தலைவனும், தலைவியும் களவில் சந்திக்கின்றனர். தலைவியைச் சந்திக்கும்பொருட்டு யாமப் பொழுதைத் தனக்கு வாய்ப்பாக அமைத்துக் கொண்டு தலைவன் தலைவியைச் சந்திக்க வருகிறான். முல்லையில் தலைவி தலைவனுடைய வருகைக்காகக் காத்திருக்கிறாள். மருதத்திணையில் பரத்தையின் பொருட்டாகப் பிரிந்து சென்ற தலைவனிடம் ஊடல் கொள்கிறாள். பிரிந்து சென்ற கணவன் வாராமையினால் நெய்தலில் இரங்குகிறாள். தலைவன் பிரிவுக்காகப் பாலையில் துன்புறுகிறாள். ஆக மேற்கண்ட நிகழ்வுகள் அனைத்திற்கும் பொழுதுகளே காரணமாகின்றன. அவ்வடிப்படையில் பொழுதுகளில் அறங்கள் வாழ்வியல் சூழலை ஒட்டிப் பிறக்கின்றன.

## களவு வாழ்க்கை

களவு, குறிஞ்சி நிலத்தில் சிறப்பாகப் பேசப்படுவதாகும். தொல்காப்பியர், இன்பமும் பொருளும் அறமும் ஒன்றுடன் ஒன்று இணைந்து அவற்றுடன் அன்பும் சேரக் களவு தொடக்கம் காண்கிறது என்று குறிப்பிடுவர். தலைவன் தலைவியின் களவு உறவு இயற்கையாக நடைபெறுகிறது.

'ஒன்றே வேறே என்றிரு பால்வயின்

ஒன்றி உயர்ந்த பால தாணையின்

ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப'

என்று தொல்காப்பியர் களவுக்கு இலக்கணம் கூறுகிறார். சங்க இலக்கியங்களுள் பத்துப்பாட்டில் இடம்பெற்றிருக்கும் குறிஞ்சிப்பாட்டு களவுக்கும் அதன் களமான யாமப் பொழுதுக்கும் சிறப்பான எடுத்துக்காட்டாக அமையும் இலக்கியமாகும். அறத்தொடு நிற்றலாக அமையும் இவ்விலக்கியத்தில் 'களவுமணம்', 'கற்புமணம்' இரண்டுக்குமான களங்கள் சுட்டப்படுகின்றன. மேற்கொண்டது களவு வாழ்க்கை எனினும் அது கற்பில் முடிய வேண்டும் என்னும் உயரிய சிந்தனையினையே அக இலக்கியங்கள் கற்பிக்கின்றன.

'நேரிறை முன்கை பற்றி நுமர்தர

நாடறி நன்மண மயர்கம்'

என்னும் குறிஞ்சிப்பாட்டின் அடிகளால் அறியலாம். அகத்திணையில் குறிஞ்சியில் வரக்கூடிய துறைகளும் பெரும்பான்மையான நிலையில் அறத்தையே கற்பிக்கின்றன. இதனை வரைவு கடாதல், உடன்போக்கு, அறத்தொடு நிற்றல் முதலான துறைகளின் வழி அறியலாம். வரைவு கடாதல் தலைவன் களவை நீடிக்காமல் திருமணம் செய்ய வற்புறுத்துகின்றது. கற்பைக் காக்க, காதலித்தவனையே மணக்க உடன்போக்கு அமைகிறது. களவைக் கற்பாக்க அறத்தொடு நிற்றல் நடைபெறுகிறது. இச்சிந்தனைகள் குறிஞ்சித்திணையில் கருக்கொள்கின்றன.

## வரைவு கடாதல் அறம்

வரைவு கடாதல் என்பது தலைவன் தலைவியை விரைந்து மணந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துவதாகும். தலைவன் களவு வாழ்க்கையில் மனம் கொண்டு அதிலேயே மூழ்கி வரைவை நீட்டிக்கவே, தோழி தலைவியின் நிலையைத் தலைவனிடம் பக்குவமாக எடுத்துக்கூறுகிறாள். இதற்கு, வரும் வழியின் அருமைத்தன்மை, காவல், தலைவியின் தனிப்பட்ட மனநிலை இத்தனையும் காரணங்களாகின்றன.

'வேரல் வேலி வேர்க்கோட் பலவின்

சாரல் நாட செவ்வியை ஆகுமதி

யாரஃ தறிந்திசி னோரே - சாரல்

சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்

உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே'

'கூன்முள் முண்டகக் கூர்ம்பனி மாமலர்

நூலறு முத்திற் காலொடு பாறித்

துறைதொறும் பரக்கும் தூமணற் சேர்ப்பனை

யானும் காதலென் யாயுநன் வெய்யள்

எந்தையுங் கொடீஇயர் வேண்டும்

அம்ப லூரும் அவனொடு மொழிமே'

என்னும் பாக்கள் வரைவுகடாதல் துறையில் அமைந்தவை. இருபாக்களும் தோழி கூற்றாக அமைகின்றன. தலைவன் களவுக் காலத்தில் பெறும் இன்பத்தை நீட்டித்துக் கொண்டிருக்க, தோழி தலைவியின் ஆற்றாமையினையும் அவளுடைய நிலையினையும் எடுத்துக்கூறி விரைந்து திருமணம் செய்து கொள்ள வற்புறுத்துகின்றாள். தலைவியின் காமம் முதிர்ந்தால் அது அவளுக்குத் துன்பமாய்

முடியும். அலர் எழுந்து தலைவிக்குத் துன்பம் செய்கின்றது எனத்தோழி மொழியும் கருத்துகள் அறவழிப்பட்டனவே. களவை நீடிக்கும் தலைவன் விரைந்து தலைவியை மணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமே தோழியிடம் அறமாக வெளிப்படுகிறது.

## உடன்போக்கு

தலைவன், தலைவி இருவரும் களவுக் காலத்தில் காதல் கொண்டு அக்காதலைக் கற்பாக்கும் பொருட்டுப் பெற்றோருக்கு அறிவிக்காமல் தாங்களே முடிவெடுத்தல். சங்க இலக்கியங்கள் அறம் கூறும் முறைமையில் அறத்தொடு நிற்றலுக்குப் பின்பே பெரும்பான்மையான நிலையில் பெற்றோர்கள் ஏற்றுக்கொள்ள இயலாநிலையில் உடன்போக்கு நிகழ்ந்துள்ளன. நினைத்தவனைக் கைப்பிடிக்க வேண்டும் என்னும் எண்ணம் கொண்ட பெண் கற்பின் வலிமையை மனத்தில் நினைத்துப் பெண்ணுக்குரிய குணங்களைத் துறந்து உடன்போக்குச் செல்லத் துணிகிறாள். உடன்போக்கு ஒருவகையில் களவைக் கற்பாக்கும் வழியாகப் பயன்பட்டிருக்கிறது. தொல்காப்பியம்,

'கொடுப்போர் இன்றியுங் கரண முண்டே

புணர்ந்துடன் போகிய காலை யான'

என்று குறிப்பிடுகிறது. ஐங்குறுநூற்றின்,

'அறநெறி யிதுவெனத் தெளிந்தவென்

பிறைநுதற் குறுமகள்'

என்னும் பாடலடிகள் செவிலியின் கூற்றாக அமைகின்றன. இதுதான் அறநெறி என்று நினைத்துப் பிறைபோன்ற நெற்றியை உடைய என் மகள் களவைத் தேர்ந்தாளோ என்று சிந்திக்கிறாள். கற்பின் உயர்வைக் கூறவரும்போது உலகோர்களும் உடன்போக்கை ஏற்றுக் கொண்டனர் என்பது கலித்தொகையில் இடம்பெறும் பாலைத்திணைப் பாடலான் தெளிவாகிறது (Nachinarkiniyar, 2007).

'இறந்த கற்பினாட் கெவ்வம் படரன்மின்

சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்

அறந்தலைப் பிரியா வாறுமற் றதுவே'

தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் களவில் விரும்பி, அதனைத் தோழி செவிலிக்கும் செவிலி நற்றாய்க்கும், நற்றாய் தந்தைக்கும் அறத்தொடு நின்று களவைக் கற்பாக்குவது ஒருபுறம் இருக்க் தலைவன் தலைவி இருவரும் உடன்போக்குச் சென்றும் களவைக் கற்பு வாழ்வாக்க முனைவதும் உண்டு. க.ப. அறவாணன், 'களவு இருவழிகளால் கற்பு மணம் எய்தும், ஒன்று; அறத்தொடு நிற்றல் நிலைஇ பிறிதொன்று; உடன்போக்கு. முன்னதுஇ மென்முறை; பின்னது, வன்முறை எனினும் அன்றைய சமுதாயத்தில் உடன்போக்கை மறுத்தல் இல்லை. மறு என ஒறுத்தலும் இல்லை' என்று குறிப்பிடுகிறார்.

## அறத்தொடு நிற்றல்

அறத்தொடு நிற்றல் என்பது களவைக் கற்பாக்கும் முயற்சி. தலைவி தலைவனைச் சந்திக்க இயலாத காரணத்தால் அவளுக்கு உடல் வேறுபாடடையும், இதனைக் கண்ட தாய் அவளுக்கு வெறியாட்டு நடத்த முனைவாள். அப்போது தோழி அவளுக்கு வந்திருக்கும் நோய் இத்தகையது என்று காதல் வயப்பட்டமையினைச் சொல்லும் வகையில் சொல்லில் புரிய வைக்கிறாள்.

புலவர் குழந்தை, 'அறத்தொடு நிலையாவது தான் கொண்ட ஒழுக்கத்தின்கண் நிற்றல்; அறம் ஒழுக்கம் அதாவது களவொழுக்கம் முதிர்ந்து கற்பொழுக்கம் ஒழுகுதல்' என்று குறிப்பிடுகிறார். சங்க இலக்கியங்களில் பத்துப்பாட்டில் அமைந்திருக்கும் குறிஞ்சிப்பாட்டு அறத்தொடு நிற்றல் துறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்து சிறக்கிறது. கு.மோகனராசு, 'களவு வாழ்க்கையில் தோழியின்

துணையோடு அமையும் கூட்டத்தில் வருகின்ற அறத்தொடு நிற்றல் என்னும் துறை, துறைக் குறியீடு, அறம் நோக்கியே களவு நடையிட வேண்டியதை உணர்த்துகின்றது. அந்த அறம் தலைமகளின் உறவுகளோடு சேரும்போது கொடுப்போர் கூடிய மணமாகிறது; அல்லாத போது உடன்போக்காகிக் கொடுப்போன் இன்றி அமையும் மணமாகிறது. இருவகை மணங்களும் இல்லறம் என்னும் நல்லறப் பணிக்கு நுழைவு வாயில்கள் ஆகின்றன' என்று குறிப்பிடுகின்றார்.

## செலவு தவிர்த்தல்

தலைவன் தலைவியின் காதல் வாழ்வில் இருவருக்கும் உள்ள அன்பினைத் தெளிவாக எடுத்துக்காட்டுவது இத்துறையே ஆகும். தலைவன் கடமையின் பொருட்டுப் பிரிந்து செல்ல நினைக்கின்ற போது, செல்லும் வழியின் அருமை நினைத்தும், முன்பு பிரிந்த அனுபவம் நினைத்தும் செலவழுங்கல் உண்டு. தலைவியின் துன்பநிலை கூறித் தோழியும் செலவழுங்குவித்தல் உண்டு.

'நான் உன் பிரிவைக் கூறினால் அவள் தன் முன்கையில் கிடந்த வளையல்கள் கழன்று விழும். கண்களில் இருந்து கண்ணீர் பெருகும். காமநோயினால் பசலைபடர்ந்து அது அலருக்கு வழியாகும். அரிதான வழியை கடந்து செல்ல நினைக்கின்றவனே நான் கூறுவதைக் கேள். நீ செல்லும் வழியில் வறட்சியினால் தாவரங்களும் உயிர்களும் துன்புற்றிருக்கும். இத்தனை கூறியும் நீ பிரிந்தால் நீ செல்லும் காடே உன்னைச் செல்ல விடாமல் தடுக்கும்' 'நீ பிரிந்து சென்றால் விழா நடந்த இடம் மறுநாள் அழகிழந்து இருப்பதுபோல் இவள் தனிமை கொண்டு வாடியிருப்பாள். தீய எண்ணமுடைய மன்னனால் கலங்கிய நாடு போல் இவள் வருத்தம் கொண்டிருப்பாள். நீ நீங்கினால் இவள் இறந்து போவாள்' 'காட்டு வழியில் நீர் இல்லாமையினால் யானைகள் கானல் நீரை நீர் என நினைத்துச் செல்லும். தலைவனே நீ பிரியும் பொருட்டாக வில்லின் நாணைத் தடவி நிற்கிறாய். நீ பிரிந்தால் இவள் உடலில் பசலை பரவும். இவள் கண்களில் கண்ணீர் பெருகும். வளையல்கள் கையில் இருந்து கழன்று விழும்.

நீ தேடும் பொருள் இவளுடைய உயிரைக் காக்குமோ?' 'நீ பொருளை நாடிச் சென்றால் இவளுடைய உடல் அழகு கெடும். இவள் இறந்துபடுவாள்' எனத் தோழி கூற்றாய் அமையும் பாக்களின் கருத்தாக்கங்கள் தலைவனின் செலவைத் தடுத்துத் தலைவியுடன் வாழச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன. பொருள், இன்பத்திற்குக் காரணமாக அமைவது இரண்டையும் ஒருசேர அனுபவித்தல் இயலாது. பொருளினும் காலத்தால் துய்க்கும் இல்லற இன்பம் இனிது என்னும் கருத்தமைவில் தோழி வழியின் அருமை, தலைவியின் துன்பம் ஆகியவற்றை எடுத்துக்கூறித் தலைவனைச் செலவழுங்கச் செய்கிறாள்.

## குடும்ப அறம்

தலைவனும் தலைவியும் சேர்ந்து வாழும் குடும்பவாழ்வு அறம் செய்தற்குக் காரணமாய் அமைந்தமையின் அதனை இல்லறம் என்றனர். அ. தட்சிணாமூர்த்தி 'பண்டைத் தமிழர் குடும்பவாழ்வு பற்றி மிகவும் உயர்ந்த கொள்கைகளைக் கொண்டிருந்தனர். அவர்கட்கு அறம் என்பது வாழ்க்கையின் ஒரு பகுதியன்று. வாழ்வு முற்றுமே அறமாகும். எனவேதான் குடும்ப வாழ்க்கையை இல்லறம் என்றனர்' என்பார். தமிழர்களின் இல்லறவாழ்வு அறங்கள் பலவற்றுக்கும் காரணமாய் அமைந்தது. தொல்காப்பியர்,

'காமஞ் சான்ற கடைக்கோட் காலை

ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி

அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்

சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே'

என்று இல்லற வாழ்வின் மேன்மையைக் குறிப்பிடுகின்றார். தலைவன் தலைவி இருவரின் இல்லறவாழ்வு, அறங்கள் பல செய்வதற்கும் வாய்ப்பாக அமைவது. அன்பு நிறைந்த மனத்தால் அறங்கள் பெருகும் வாய்ப்பு உண்டு. தலைவன் தலைவியின் ஒத்த அன்பு இல்லறத்தில் வேண்டற்பாலது.

'சாதல் அஞ்சேன் அஞ்சுவன் சாவில்

பிறப்புப் பிறி தாகுவ தாயின்

மறக்குவேன் கொல்லென் காதல னெனவே'

தலைவன் தலைவியின் நட்பு ஒரு பிறவியில் முடிவது அல்ல. அது பிறவிதோறும் தொடர்ந்து வருவது என அன்பு கொண்ட மனங்கள் இணைந்தன. பிறவிதோறும் பிரியாமல் இருக்க வேண்டும் என அவை விரும்பின. இத்தகைய கருத்தாக்கங்கள் சங்க இலக்கியத்தின் உயிர் நாடியாக அமைகின்றன. இரு உள்ளங்கள் இயற்கையாலும் ஊழாலும் ஒன்றிணைந்தமையினை செம்புலப் பெயல் நீரார்,

'செம்புலப் பெயல்நீர் போல

அன்புடை நெஞ்சந் தாம்கலந்தனவே'

என்று குறிப்பிடுகின்றார். வாழ்க்கை இன்பமும் துன்பமும் நிறைந்தது. வாழ்க்கையில் எத்தகைய துன்பம் வந்தபோதும் மனமொத்து அன்புடன் வாழ்கின்ற வாழ்க்கையே சிறந்ததாகும் என்று கலித்தொகை குறிப்பிடுகிறது (Nachinarkiniyar, 2007).

'ஒன்றன்கூ றாடை யுடுப்பவரே யாயினும்

ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை'

இல்லற வாழ்க்கை அன்பு கலந்ததாய் இனிதாக அமையுமானால் அதைவிடச் சிறந்த அறம் இல்லை என்று குறுந்தொகை வலியுறுத்துகிறது (Nagarajan, 2004).

'மனையுறை வாழ்க்கை வல்லி யாங்கு

மருவி னினியவு முளவோ'

என்னும் அடிகள் வலியுறுத்துகின்றன. பண்டைய சங்கச் சமுதாயத்தில் இல்லறம் பேணுதல் மகளிர்க்குரிய அறமாகவும், பொருள் தேடலும், கடமையாற்றலும் ஆண்களுக்குரிய அறமாகவும் இருந்தன. 'கடமை செய்தல் ஆடவர்க்கு உயிர், குடும்பத்தை வழிநடத்தல் பெண்களுக்குரிய கடன்'41 என்று குறுந்தொகை குறிப்பிடுகிறது (Nagarajan, 2004). தலைவன் பொருள் தேடச் சென்றால் அவன் மீண்டு வரும்வரை தலைவி ஆற்றியிருப்பாள். அவளுடைய தனிமை தலைவன் தலைவியின் வாழ்வியல் சூழலில் அன்பை மிகுதிப் படுத்துவதாகவே அமைகிறது. அறமுறைப்பட்ட இல்லற வாழ்வில் பிரிவு தவிர்க்க முடியாததாகிறது. ஆடவர் வினை முற்றி வரும் வரை மகளிர் அவர் பிரிவினை மனையிலிருந்து தாங்கி இருப்பது கடமையாகக் கருதப்பட்டது.

'செல்ப என்ப தாமே சென்று

தம்வினை முற்றி வரூஉம்வரை தம்மனை

வாழ்தும் என்ப தாமே'

என்னும் நற்றிணை அடிகள் உணர்த்தும் (Parimanam & Balasubramaniyam, 2004). காதலைத் தலைவன் தலைவி இருவரும் உயர்வாக மதித்தனர். தலைவன் பொருளினும் தலைவியோடு இருத்தலே இன்பமென்று சிறந்தமையைப் பட்டினப்பாலை வலியுறுத்துகிறது.

'முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்

வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய

வாரேன் வாழிய நெஞ்சே'

கடமையினும் காதல் உணர்வே தலைவன் மனத்தில் விஞ்சி அது செலவழுங்கலுக்குக் காரணமாக அமைந்தமையினையே பட்டினப்பாலை உட்பொருளாகக் கொண்டு சிறக்கிறது. தலைவன் தலைவி இருவரும் இணைந்து வாழ்கின்ற வாழ்க்கையில் வறுமை வந்தபோதும் தலைவி, தலைவனின் வறுமைப்பட்ட வாழ்வே சிறந்தது என்று வாழ்ந்தமையை அறிய முடிகிறது. 'தந்தையின் இல்லத்தில் தங்கத்தட்டில் பால் உணவு உண்டு வாழ்ந்தவள் மான் உண்டு எஞ்சிய கலங்கல் நீரை உண்டு வாழ்கிறாள்' என்னும் ஐங்குறுநூற்றுக் கருத்தும் 'தன் கணவன் வறுமையுற்ற காலத்திலும் தன் தந்தையின் செல்வத்தை எண்ணாமல் இருந்தாள்' என்னும் நற்றிணைக் கருத்தும் மேற்கண்ட கருத்துக்கு அரண் செய்யும் (Parimanam & Balasubramaniyam, 2004).

தலைவன் இல்லறக் கடமையில் இருந்தாலும் பொருள் தேடச் சென்றாலும் புற ஒழுக்கங்களில் ஈடுபட்டாலும் எந்நிலையிலும் அறம் வழுவா மனத்தைக் கொண்டவளாகத் தலைவி விளங்கினாள். உலகில் மழைவளம் பெருக வேண்டும் நாட்டில் வளம் பெருக வேண்டும் மன்னனின் ஆட்சி சிறக்க வேண்டும்; நெல்லும் பொன்னும் பெருக வேண்டும் என்று வாழ்த்திய முறைமையினை ஐங்குறுநூறு தெளிவாக்குகிறது.

## கற்புக் கோட்பாடு

சங்க இலக்கியத்தில் தலைவன் தலைவி உறவில் கற்புக் கோட்பாடு தலையாயது. முல்லைத் திணை கற்பிற்கு என்றே உருவாக்கப்பட்ட திணையாக விளங்குகிறது. தொல்காப்பியர், 'கற்பு, காமம், நாற்பாலொழுக்கம், பொறை, நிறை, விருந்து, புறந்தருதல், சுற்றம், ஓம்பல் ஆகிய பண்புகளை மகளிர்க்குரிய மாண்புகள்' என்று குறிப்பிடுகின்றார். கற்புக் குணத்தாலேயே சங்ககால மகளிர்கள் இப்பிறவியில் பெற்ற கணவனையே இனி வரும் பிறவிகளிலும் பெறவேண்டும் என நினைத்தனர். கற்புடைய பெண்களின் கணவனுடைய வழிநடைப் பயணத்தில் வெம்மையில் இருந்து தப்ப அறக்கடவுள் உதவும் பாங்கைக் கலித்தொகை குறிப்பிடுகிறது (Nachinarkiniyar, 2007).

'வறனோடின் வையகத்து வான்றருங் கற்பினாள்

நிறனோடிப் பசப்பூர்த லுண்டெனே

அறனோடி விலங்கின்றவ ராள்வினைத் திறத்தே'

பண்டைக் காலத்தில் மனைவியைத் தவிரப் பிற பெண்களை

நினைக்காத ஆடவர்களும் இருந்திருக்கின்றனர் என்பதை,

'கால்பொருது இடிப்பினுங் கதழுறை கடுகினும்

உருமுடன்று எறியினும் ஊறுபல தோன்றினும்

பெருநிலங் கிளரினுந் திருநல உருவின்

மாயா வியற்கைப் பாவையின்

போதல் ஒல்லாளென் நெஞ்சத் தானே'

என்னும் நற்றிணைப் பாடலடிகள் தெளிவாக்குகின்றன (Parimanam & Balasubramaniyam, 2004).

## ஒழுக்கம்

சங்ககாலம் ஒழுக்கம் தலையாயதாகப் போற்றப்பட்ட காலம். மக்கள் தங்கள் நல்ல குணத்தில் இருந்து மாறினால் எந்நிலையிலும் அதனைத் திரும்பப்பெற இயலாது. இதையே குறிஞ்சிப்பாட்டு அறமாக வலியுறுத்துகின்றது. 'மணி, பொன், முத்து ஆகியவை கொண்டு செய்யப்பட்ட அணிகலன் அறுந்து போனால் தொழில் வல்லான் ஒருவனைக் கொண்டு சரிசெய்து கொள்ளலாம். ஆனால் ஒருவருடைய நற்குணம் கெட்டால் முனிவராலும் அதனை மீண்டும் பெற இயலாது'. பண்டைத்

தமிழர்களின் வாழ்வில் ஒழுக்கம் தலையாயதாகக் கருதப்பட்ட நிலையில் அவ்வொழுக்கம் எந்நிலையிலும் குறையாத வாழ்வை அவர்கள் வாழ்ந்து காட்டினர். அறம் செய்வதற்காகவே பண்டைத் தமிழர்கள் பொருளீட்டினார்கள். அப்பொருள்களையும் அறநெறியான ஒழுக்க நெறி வழி நின்று ஈட்டினார்கள். காதலித்த பெண்ணைக் கைபிடிக்க வேண்டும் என்னும் கற்புக் கோட்பாட்டில் பண்டைச் சமுதாயம் உறுதியுடன் இருந்தமையினை அகநானூறு தெளிவாக்குகிறது (Venkatasamy Nattar, 2012).

'திருநுதற் குறுமக ளணிநலம் வவ்விய

அறனி லாள னறியே னென்ற

திறனில் வெஞ்சூ ளறிகரி கடாஅய்

முறியார் பெருங்கிளை செறியப் பற்றி

நீறுதலைப் பெய்த ஞான்றை

வீறுசா லவையத் தார்ப்பினும் பெரிதே'

இப்பாடலடிகளில் காதலித்தவளைக் கைவிட்டவனை மரத்தில் கட்டிவைத்துச் சுண்ணாம்பு நீற்றை அவன் தலையில் கொட்டித் தண்டித்ததாக கூறப்பட்டுள்ளது.

'தீதில் னெஞ்சத்துக் காதல் கொள்ளாப்

பல்லிருங் கூந்தன் மகளிர்

ஒல்லா முயக்கிடைக் குழைகவென் றாரே'

மனைவியோடு சேர்ந்து வாழும் வாழ்க்கை ஒழுக்கம் மிக்கதாகவும் பரத்தையின் தொடர்பு தீயதாகவும் கருதப்பட்டது.

## வாழ்வில் அறமும் பொருளும்

இல்லற வாழ்க்கை அறவழிப்பட்டதாக இருந்ததால் தேடும் பொருளையும் அறவழியில் வழங்கவேண்டும். வாழ்க்கையில் அறச்செயல்கள் புரிவதற்கும் பிறரிடம் சென்று பொருளுக்காக நில்லாமைக்கும் பொருளீட்டுதல் கடமையாகக் கூறப்பட்டது.

'அறன்கடைப் படாஅ வாழ்க்கையு மென்றும்

பிறன்கடைச் செலாஅச் செல்வமு மிரண்டும்

பொருளி னாகும்'

பொருள் ஈட்டுதல் கடமை என்று கருதப்பட்டதுடன் முன்னோர் சேர்த்து வைத்த பொருளைக் கொண்டு சோம்பி இருந்து வாழ்ந்ததைப் பண்டைய சங்க இலக்கியம் கண்டித்தது.

'உள்ளது சிதைப்போ ருளரெனப் படாஅர்

இல்லோர் வாழ்க்கை யிரவினு மிளிவு'

முன்னோர்கள் தேடிவைத்த பொருளைக் கொண்டு வாழ்க்கை நடத்துவது இழிவான செயலாகும் என்று கருதிய பண்டைத் தலைவன் பொருள்தேடச் சென்ற கடமை உணர்வைச் சங்க இலக்கியம் தெளிவுபடுத்துகிறது.

'வண்டுபடு பிருளிய தாழிருங் கூந்தல்

சுரும்புண விரிந்த பெருந்தண் கோதை

இவளினுஞ் சிறந்தன் றீத னமக்கென'

தலைவன் இல்வாழ்க்கை வாழ்வதற்கும் ஈகை வழங்குவதற்கும் பொருள் தேவை என்று எண்ணினான். அதன் காரணமாகப் பொருள்கருதிப் பிரிந்து சென்றான். களவு கற்பாக மாறவும், கற்பில் அறம் செய்யவும் பொருள் தேவைப்பட்டது. அதனால் தலைவன் திருமணத்தின் முன்பு வரைவிடை வைத்துப் பிரிந்தான். திருமணத்தின் பின் இல்லற வாழ்வுக்காகவும் அறம் செய்யவும் பிரிந்து சென்றான்.

'அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்

பெரிதாய பகைவென்று பேணாரைத் தேறுதலும்

புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்

பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்'

## உபசரிக்கும் பண்பு

பண்டைய தமிழ்ச் சமுதாயம் விருந்து உபசரித்தலில் சிறந்து விளங்கியது. கணவனும் மனைவியும் இல்லறத்தில் இருந்து விருந்தோம்புவதை விரும்பினார்கள். மா. ராசமாணிக்கனார், 'இல்வாழ்க்கை நடத்தும் கணவனும் மனைவியும் தம் உற்றார் உறவினரைக் காக்கக் கடமைப்பட்டவர். அவருடன் நில்லாது தம் இல்லம் நாடி வரும் பிறரையும் உண்டியாலும் உறையுளாலும் உபசரித்தல் அவர் தம் கடமை என்று அறநூல்கள் அறைகின்றன' என்று குறிப்பிடுகின்றார். 'வருகின்ற விருந்தினர்களைப் போற்றி உபசரித்து அவளோடு கூடி வாழ்வதே வாழ்க்கையின் உண்மையான இன்பமும் பொருளும் ஆகும்'. 'விருந்தினர்கள் உண்டு எஞ்சி இருக்கின்ற உணவை உண்ணுவதே சிறப்பு அதுவே இல்லறம்' என இலக்கியங்கள் கூறுகின்றன.

இல்லத்திற்கு விருந்தினர்கள் வருவது கண்டு இல்லறத்தில் உள்ளவர்கள் மகிழ்ந்தனர். அவர்களை இன்முகத்தோடு வரவேற்கவும் செய்தனர் என்கிறது நற்றிணை (Parimanam & Balasubramaniyam, 2004).

'எமக்கே வருகதில் விருந்தே சிவப்பான்று

சிறுமுள் எயிறு தோன்ற

முறுவல் கொண்ட முகங்காண் கம்மே'

பண்டைய சமுதாயத்தில் எவரும் பசி, பட்டினியால் வாடக்கூடாது என்னும் சிந்தனையில் இல்லறத்தார் இருந்தமையால் இரவு இல்லக்கதவை அடைக்கும் முன்பு இன்னும் உணவு உண்ணாதவர்கள் இருக்கிறீர்களா என்று கேட்ட பின்பே கதவடைத்தனர்.

## முடிவுரை

பொருள் இல்லாத நிலையில் கடன்பட்டேனும் விருந்தினர்களை உபசரிப்பதைப் பண்டைத் தமிழர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். அ. தட்சிணாமூர்த்தி, 'பெரும்பான்மையான மக்கள் உணவுக்காக செல்லும் ஊரையே நம்பியிருந்தனர். இத்தகு சமூகத்தில் விருந்தோம்பல் ஒரு தனி அறமாக இலங்கியது' என்று குறிப்பிடுகிறார். ஈகைப் பண்பைப் பெற்றிருக்க வேண்டும் என எண்ணப்பட்டது. இல்லற வாழ்க்கை பொருள் இல்லாமல் சிறப்படையாது என்பதனால் பொருளை ஈட்டும் முறையும் அறவழியிலேயே அமைய வேண்டும் என்று உணர்த்தப்பட்டது. சங்க இலக்கியங்களில் பயன்பட்டிருக்கும் பெரும்பொழுதுகளும் சிறுபொழுதுகளும் அறம் விளையும் களமாக அமைந்து சிறக்கின்றன. பொழுதுகளில் நடைபெறும் செயல்கள் வாழ்வியல் நோக்கிலும் தனிமனித நோக்கிலும் சமுதாய நோக்கிலும் குடும்ப நோக்கிலும் அறம் போதிப்பனவாக உள்ளன.

## References

Nachinarkiniyar, (2007) Kaliththogai, Kalaga Veeliyidu, Chennai, India

Nagarajan, V. (2004) Kurunthokai, New Century Book House (P)Ltd, Chennai, India.

Parimanam, A.M., Balasubramaniyam, K.V. (2004) Natrinai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Venkatasamy Nattar, N.M. (2012) Agananooru Moolamum Uraiyum, Saratha Pathippagam, Chennai, India.

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License